திருமுட்டம் பேரூராட்சியில்

நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம்!

அமைச்சர் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் சிறப்புரை!

கடலூர்,செப்.8

கடலூர் கிழக்கு மாவட்டம், திருமுட்டம் பேரூராட்சியில், அரசு மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நலம் காக்கும் ஸ்டாலின் திட்ட முகாம் நிகழ்ச்சி நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் சிபி ஆதித்ய செந்தில்குமார் தலைமை தாங்கினார்.

மாவட்ட சுகாதார அலுவலர் பொற்கொடி அனைவரையும் வரவேற்றார். சிந்தனைச் செல்வன் எம்எல்.ஏ., கூடுதல் ஆட்சியர் பிரியங்கா ,பேரூராட்சி உதவி இயக்குனர் முகமது ரிஸ்வான், ஒன்றிய ஆத்மா குழு தலைவர் தங்க.ஆனந்தன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பேரூராட்சி மன்ற தலைவர் செல்வி ஆனந்தன், துணைத் தலைவர் முத்தமிழ் அரசி பார்த்திபன் வாழ்த்துரை வழங்கினார்கள்.

வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அவர்கள் நலம் காக்கும் ஸ்டாலின் சிறப்பு மருத்துவ முகாமை தொடங்கி வைத்து சித்தா மூலம் மகப்பேறு சஞ்சீவி பெட்டகத்தையும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகம் ஆகியவற்றை வழங்கி பேசுகையில்,

இந்தத் திட்டம் மாவட்டத்தில் ஐந்தாவதாக தொடங்கப்பட்டுள்ளது. நலம் காக்கும் திட்டத்தில் அனைத்து பரிசோதனைகளும் செய்யப்படுகிறது. ஏற்கனவே கிராமப்புறங்களில் போதிய சாலை வசதி இன்றி சேரும் சகதியும் மாக இருந்தபோது காலில் சேற்றுப்புண் உருவாகியது. தற்போது அந்த நிலை மாறி கிராமப்புறங்களில் சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. தொழிலாளர் கள். தூய்மை பணியாளர்கள் கட்டிட பணியாளர்கள் நல வாரியத்தில் உள்ளவர்கள் இந்த திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளனர். கிராமப்புறங்களில் உள்ளவர்களுக்கு என்ன நோய் என தெரிய முடியவில்லை,

தற்போது உணவு பழக்கம் மாறி கொலஸ்ட்ரால் அதிகரித்துள்ளது. ஏற்கனவே இருந்தவர்கள் நடந்து சென்றார்கள். சிலர் சைக்கிளில் சென்றனர். ஆனால் நோய்களை கண்டறிய முடியாமல் இருந்தனர். ஆனால் இப்பொழுது மருத்துவ புரட்சி ஏற்பட்டு நோய்களை கண்டறிந்து சிகிச்சை அளிக்கும் நடவடிக்கையை கழக அரசு மேற்கொள்ளப்பட்டு வருவதால் இளைஞர்களின் ஆயுள் நீடித்து ள்ளது.

எனவே இந்த வாய்ப்பை பொதுமக்கள் பயன்படுத்தி பயன்பெறுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

பேரூராட்சி செயல் அலுவலர் ரஞ்சித் ,திருமுட்டம் வட்டாட்சியர் இளஞ்சூரியன். வட்டார வளர்ச்சி அலுவலர் செந்தில் வேல்முருகன், வீராங்கன், மாவட்ட கலை இலக்கிய பேரவை தலைவர் வாசு ராஜேந்திரன், மாவட்ட விவசாய அணி துணை தலைவர் தங்க கிருஷ்ண மூர்த்தி, மாவட்ட வர்த்தக அணி தலைவர் முத்து ராமலிங்கம், மாவட்ட இலக்கிய அணி துணை அமைப்பாளர் கருணாநிதி, மாவட்ட விளையாட்டு அணி அமைப்பாளர் பூ.சதீஷ்குமார், பேரூர் கழக செயலாளர் பூ.செல்வ குமார், ஒன்றிய அவை தலைவர் கண்ணப்பன், பொருளாளர் பார்த்திபன், ஆனந்த வீரவேல் உள்ளிட்ட கழக நிர்வாகி கள், அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர். வட்டார மருத்துவ அலுவலர் தங்கதுரை நன்றியுரையாற்றினார்.

தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி புதிய பேருந்து நிலையம் அருகே Yellove செயற்கை புல்வெளி மைதானத்தை சமூக நலத்துறை மற்றும் மகளிர் உரிமைத் துறை அமைச்சர் பெ.கீதா ஜீவன் திறந்து வைத்தார்.உடன் கோவில்பட்டி நகர் மன்றத் தலைவர் கருணாநிதி, ஒன்றிய செயலாளர் முருகேசன், பொதுக் குழு உறுப்பினர் இரா.ரமேஷ், நகர் மன்ற உறுப்பினர் கு.தவமணி, கிழக்கு நகர செயலாளர் சுரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சேலம் மாநகராட்சி

அஸ்தம்பட்டி மண்டலத்தில் 'உங்களுடன் ஸ்டாலின்' திட்ட முகாம்!

அமைச்சர் இரா.இராஜேந்திரன் ஆய்வு!

சேலம், செப். 8-

சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி மண்டலம், வார்டு 13, 14 பகுதிகளுக்கு தொங்கும் பூங்கா திருமண மண்டபத்தில் நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை மாண்புமிகு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி மண்டலம், வார்டு 13, 14 பகுதிகளுக்கு தொங்கும் பூங்கா திருமண மண்டபத்தில் இன்று (06.09.2025) நடைபெற்று வரும் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது :

முதலமைச்சர் அவர்களால் "உங்களுடன் ஸ்டாலின்" திட்டம் 15.07.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டதைத் தொடர்ந்து, சேலம் மாவட்டத்தில் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. "உங்களுடன் ஸ்டாலின்" திட்டத்தின் கீழ் சேலம் மாவட்டத்தில் 15.07.2025 அன்று முதல் வரும் நவம்பர் மாதம் வரை நகர்ப்புறப்பகுதிகளில் 168 முகாம்களும் மற்றும் ஊரகப் பகுதிகளில் 264 முகாம்களும் என மொத்தம் 432 சிறப்பு முகாம்கள் திட்டமிடப்பட்டு பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு தீர்வுகள் காணப்பட்டு வருகிறது.

தமிழ்நாட்டில் உள்ள கடைகோடி மக்கள் அன்றாடம் அணுகும் அரசுத்துறைகளின் சேவைகள் அவர்கள் வசிக்கும் பகுதிக்கு அருகாமையிலேயே சென்று வழங்குவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உங்களுடன் ஸ்டாலின் திட்டத்தில் பெறப்படும் மனுக்கள் அனைத்திற்கும் 45 நாட்களுக்குள் தீர்வு காண வேண்டுமென உத்தரவிட்டுள்ளார்கள்.

சேலம் மாவட்டத்தில் 15.07.2025 முதல் 04.09.2025 வரை நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம்களில் பல்வேறு துறைகளின் சார்பில் மொத்தம் 84,695 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டுள்ளன. இதுதவிர கலைஞர் மகளிர் உரிமைத் தொகை கோரிக்கை விண்ணப்பமாக மொத்தம் 95,923 விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளன.

இதன் தொடர்ச்சியாக, இன்று (06.09.2025) சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி மண்டலம் வார்டு 13, 14 பகுதிக்கு உட்பட்டவர்களுக்கு சேலம் பிரட்ஸ் ரோடு, தொங்கும் பூங்கா திருமண மண்டபத்திலும், நகர்ப்புறத்தை ஒட்டியுள்ள கிராம ஊராட்சி, சன்னியாசிகுண்டு பகுதிக்கு உட்பட்டவர்களுக்கு சன்னியாசி குண்டு ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியிலும், தாரமங்கலம் நகராட்சி வார்டு 5, 6, 7 க்குட்பட்ட பகுதிகளுக்கு தாரமங்கலம் ஜலகண்டாபுரம் பிரதான சாலை, 14வது வார்டு பொன்னுசாமி திருமண மண்டபத்திலும், வனவாசி பேரூராட்சி வார்டு 1, 2, 3, 4, 5, 6 க்குட்பட்ட பகுதிகளுக்கு வனவாசி சந்தைப்பேட்டை, 3வது வார்டு, பொடார.வை. முருகேச முதலியார் திருமண மண்டபத்திலும், கொங்கணாபுரம் ஊராட்சி ஒன்றியம், புதுப்பாளையம் பகுதிக்கு புதுப்பாளையம் திருக்குறள் திருமண மண்டபத்திலும், பனமரத்துப்பட்டி ஊராட்சி ஒன்றியம் நாழிக்கல்பட்டி, தம்மநாயக்கன்பட்டி பகுதிகளுக்கு நாழிக்கல்பட்டி ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் சந்தை திடலிலும், சங்ககிரி ஊராட்சி ஒன்றியம் மோரூர் கிழக்கு, அன்னதானப்பட்டி பகுதிகளுக்கு சங்ககிரி பார்வதிபாய் திருமண மண்டபத்திலும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாம் நடைபெற்று வருகிறது.

அந்தவகையில் (06.09.2025) சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி மண்டலம், வார்டு 13, 14 பகுதிக்கு தொங்கும் பூங்கா திருமண மண்டபத்தில் நடைபெற்று வரும் "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமினை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, முகாமில் பொதுமக்களுக்கு தேவையான குடிநீர் வசதிகள், இருக்கை வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் அமைக்கப்பட்டுள்ளது குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், இன்றைய தினம் முகாமில் வழங்கிய மனுக்கள் மீது உடனடி நடவடிக்கை மேற்கொண்டு 4 நபர்களுக்கு புதிய குடிநீர் இணைப்புக்கான ஆணையும், 2 நபர்களுக்கு சொத்து வரி பெயர் மாற்றத்திற்கான உத்தரவு ஆணைகளும் வழங்கப்பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்நிகழ்வின் போது, மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர். இரா. பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன், உதவி ஆணையர் திருமதி லட்சுமி, சேலம் வட்டாட்சியர் பார்த்தசாரதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

மாவட்டச் செயலாளர்கள் தே.மதியழகன் எம்.எல்.ஏ. – ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

கிருஷ்ணகிரியில் போக்சோ குறித்து விழிப்புணர்வு பயிற்சி!

அமைச்சர்கள் அர.சக்கரபாணி - அன்பில் மகேஷ் பொய்யாமொழி சிறப்புரை!

கிருஷ்ணகிரி, செப். 8 -

பள்ளிக்கல்வித்துறை, தனியார் பள்ளிகள் இயக்ககம் சார்பாக, தனியார் பள்ளிகளின் முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (POSCO) விழிப்புணர்வு பயிற்சியை உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி, மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் மாவட்ட ஆட்சித்தலைவர் தினேஷ்குமார், சட்டமன்ற உறுப்பினர்கள் மதியழகன், பிரகாஷ், ஓசூர் மாநகராட்சி மேயர் சத்யா, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகன் ,தனியார் பள்ளிகள் இயக்குநர் முனைவர். குப்புசாமி, பள்ளி சாரா மற்றும் வயது வந்தோர் கல்வி இயக்குநர் முனைவர். சுகன்யா ஆகியோர் முன்னிலையில் துவக்கி வைத்தனர்.

"தீயவை தீய பயத்தலால் தீயவை தீயினும் அஞ்சப் படும்" என்னும் வள்ளுவரின் வாக்கிற்கு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் விளக்கவுரை என்பது, தீய செயல்களால் தீமையே கிடைக்கும் என்பதால், அச்செயல்களை தீயை விட கொடுமையானவையாக கருதி அவற்றை செய்திட அஞ்சிட வேண்டும் என்பதாகும். தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தற்பொழுது இலண்டன், ஜெர்மனி ஆகிய நாடுகளுக்குச் சென்று ஏறத்தாழ ரூ.15,512 கோடி மதிப்பில் முதலீடுகளை ஈர்த்தது மட்டுமல்லாமல் தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய இளைய சமுதாயத்தினர் ஏறத்தாழ 17 ஆயிரம் நபர்கள் வேலைவாய்ப்பை பெற்ற பயன் பெறும் வகையில் உள்ளது.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பள்ளிக்கல்வித்துறை, தனியார் பள்ளிகள் இயக்ககம் சார்பாக, தனியார் பள்ளிகளின் முதல்வர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்கும் சட்டம் (POSCO) விழிப்புணர்வு பயிற்சி இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது. பெற்றோர்கள் தங்களது குழந்தைகளை பள்ளிகூடத்தில் உள்ள தாளாளர், முதல்வர், பள்ளி ஆசிரியர்களை நம்பி தான் பள்ளிக்கு அனுப்பி வைக்கிறார்கள். அதேப்போல் பெற்றோர்கள் நம் குழந்தைகளை ஆசிரியர்களிடம் ஒப்படைத்து விட்டோம், இனி அவர்கள் பார்த்துகொள்வார்கள் என்ற நம்பிக்கையில் உள்ளனர். பெற்றோர்கள் வைத்த நம்பிக்கையை உறுதிபடுத்த வேண்டும். அந்த நம்பிக்கைக்கு இடையூறாக எதெல்லாம் வருகிறது, சில நேரங்களில் குழந்தைகளுக்கான பாலியல் தொல்லை சார்ந்த செய்திகள் வரும்பொழுது, அதுசார்ந்த நடவடிக்கை எடுக்கப்படுகிறது.. பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாக்க POSCO சட்டம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். ஒரு பள்ளிக்கூட வளாகத்தில் பாலியல் குற்றம் நடைபெற்றால், விசாரணைக்காக காவல் துறை அதிகாரிகள் சீருடையில் வரக் கூடாது. ஆசிரியர்கள் உடனடியாக குழந்தையின் பெற்றோர் மற்றும் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகிற்க்கு தகவல் தெரிவிக்க வேண்டும். அரசு பள்ளிகளில் மாணவர் மனசு பெட்டி வைக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் பாதுகாப்பை உறுதிசெய்ய 14417 மற்றும் 1098 ஆகிய கட்டணமில்லா தொலைபேசி எண்கள் பற்றி விழிப்புணர்வு அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு புத்தகத்திலும் இந்த எண்கள் அச்சிடப்பட்டுள்ளது. ஒருசில குழந்தைகள் தங்களது பெற்றோர்களிடம் பேசுவதற்கு அஞ்சுவார்கள். வகுப்பறையில் நன்றாக பேசி, சிரிக்கக் கூடிய மாண வர்கள் தனியாக அமைதியாக இருக்கும் பட்சத்தில் அவர்களை கண்காணித்து, அவர்களை பற்றி பெற்றோர்களிடம் பேச வேண்டும். குழந்தைகளின் மனநிலை மாறுவதை கண்டறிவது ஆசிரியர்களின் மிகப்பெரிய பொறுப்பாகும்.

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, தமிழ்நாடு முழுவதும் POSCO சட்டம் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த ரூ.4.94 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. 90 ஆயிரம் நபர்களுக்கு இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சி ஏற்படுத்த இலக்கு நிர்ணயிக்கப்பட்டு ள்ளது. அதனடிப்படையில் தான் இன்று இந்நிகழ்ச்சி நடைபெறுகிறது. யாரோ பெற்ற பிள்ளை தானே என்றில்லாம், நம் பிள்ளைக்கு அந்த நிலைமை வந்தது என்று சொன்னால் நாம் எப்படி வெகுண்டு எழுவோமோ அதைவிட இரண்டு மடங்கு வெகுண்டு எழுந்து, குழந்தைகளுக்கு பாதுகாப்பு அரணாக விளங்க வேண்டும். தமிழ்நாட்டில் உள்ள அரசு, அரசு உதவிபெறும் பள்ளி, தனியார் பள்ளிகளில் படிக்கும் 1 கோடியே 29 இலட்சம் மாணவ, மாணவிகள் அனைவருக்கும் பாதுகாப்பாக இருந்திட அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும். இனி எங்கள் பள்ளியில் பாலியல் குற்ற நிகழ்வுகள் எதுவும் நடக்காத வண்ணம் செயல்படுவோம் என்று ஆசிரியர்கள் உறுதியுடன் செல்ல வேண்டும் என பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி அவர்கள் தெரிவித்தார்.

இந்தநிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ் , மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், மாநில விவசாய அணி துணை செயலாளர் டேம். வெங்கடேசன், மாநில வர்த்தக அணி துணை செயலாளர்கள் கே.வி.எஸ் சீனிவாசன், பிடிஅன்பரசன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன், சித்ரா சந்திர சேகர், இளைஞர் அணி தினேஷ் ராஜன் தனியார் பள்ளிகள் இணை இயக்குநர்கள் மார்ஸ், கணேசமூர்த்தி, பெற்றோர் ஆசிரியர் கழக மாநில துணைத்தலைவர் முத்துக் குமார், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் முனிராஜ், கிருஷ்ணகிரி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மரு.சத்யபாமா மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், தனியார் பள்ளி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

சேலம் மாநகராட்சி, அஸ்தம்பட்டி மண்டலம், வார்டு 13, 14 பகுதிகளுக்கு தொங்கும் பூங்கா திருமண மண்டபத்தில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமினை சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் ஆ.இராமச்சந்திரன், சேலம் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.செல்வகணபதி, சேலம் மாநகராட்சி ஆணையாளர் இளங்கோவன் உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.

அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் சிறப்புரை!

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. செயற்குழு ஆலோசனைக் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. அறிக்கை!

செஞ்சி செப் 8–

விழுப்புரம் வடக்கு மாவட்ட திமுக செயற்குழு ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் வடக்கு மாவட்ட அவைத்தலைவர் டாக்டர் சேகர் தலைமையில் சட்டமன்றத் தொகுதி மேற்பார்வையாளர்கள் செஞ்சி கார்த்திகேயன், மயிலம் இள.புகழேந்தி, திண்டிவனம் ஜாஃபர் அலி ஆகியோர் முன்னிலையில் இன்று (08.09.2025 திங்கட்கிழமை) மாலை 4.00 மணி அளவில் செஞ்சி திருவண்ணாமலை சாலையில் உள்ள வள்ளி அண்ணாமலை



திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

கூட்டத்தில் மண்டல பொறுப்பாளர், வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் கலந்து கொண்டு சிறப்புரை யாற்றுகிறார்.

பொருள்: செப்டம்பர் 15ல் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது சம்பந்தமாக,

செப்டம்பர் 17ல் கரூரில் நடைபெறும் கழக முப்பெரும் விழாவில் கலந்து கொள்வது சம்பந்தமாக,

வாக்குச்சாவடி முகவர் சரிபார்த்தல் (BLA2), (BLC),

கழக ஆக்கப் பணிகள்.

கூட்டத்திற்கு மாநில, மாவட்ட, நிர்வாகிகள்,பொதுக்குழு, செயற்குழு, உறுப்பினர்கள், ஒன்றிய, நகர, பேரூர், கழக செயலாளர்கள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள்,உள்ளாட்சி மன்ற பிரதிநிதி, நிர்வாகிகள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும் முன்னாள் அமைச்சருமான செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தனதுஅறிக்கையில் தெரிவித்துள்ளார்.

திண்டுக்கல் மாவட்டம் பழனி சட்டமன்றத் தொகுதி பழனி நகராட்சியில் "நலம் காக்கும் ஸ்டாலின் மாபெரும் சிறப்பு மருத்துவ முகாமை திண்டுக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும் பழனி சட்டமன்ற உறுப்பினருமான ஐ.பி. செந்தில் குமார் தொடங்கி வைத்து பார்வையிட்டார். இதில் பழனி கோட்டாட்சியர்,பழனி நகராட்சி ஆணையர், மாவட்ட சுகாதார அலுவலர், பழனி நகர் மன்ற தலைவர் உமாமகேஸ்வரி, துணை தலைவர் கந்தசாமி, நகர கழக செயலாளர் வேலுமணி, திண்டுக்கல் கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் பிரபாகரன், நகர் மன்ற உறுப்பினர்கள்,கழக நிர்வாகிகள், துறை சார்ந்த அதிகாரிகள் உடன் கலந்து கொண்டனர்.